Ministry of Education
SINGAPORE

# கல்வி அமைச்சு நிதி உதவித் திட்டம் (FAS) 2027

அரசாங்கப் பள்ளிகளிலும் அரசாங்க உதவி பெறும் பள்ளிகளிலும் பயிலும் வசதி குறைந்த சிங்கப்பூர் மாணவர்களது படிப்புக்குத் தேவைப்படும் நிதியுதவியைக் கல்வி அமைச்சு வழங்குகிறது.

## வருமான

**மொத்த மாதாந்திரக் குடும்ப வருமானம் =**

# $4,000

**அல்லது அதற்கும் குறைவான**

## அல்லது

**தனிநபர் சராசரி வருமானம் =**

# $1,000

**அல்லது அதற்கும் குறைவான**

கணிக்கப்பட்ட தனிநபர் சராசரி வருமானம் = மொத்த மாதாந்திரக் குடும்ப வருமானம் / குடும்ப உறுப்பினர்களில் எண்ணிக்கை

## பயன்கள்

| வகை | கல்வி நிலை | | |
|---|---|---|---|
| | தொடக்கநிலை | உயர்நிலை | பல்கலைக்கழகப் புகுமுகநிலை |
| பள்ளிக் கட்டணங்கள் | பொருந்தாதது | மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை | ம◌ாதத்திற்கு 100% முழு உதவித்தொகை |
| இதர கட்டணங்கள் | மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை | மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை | மாதத்திற்கு 100% முழு உதவித்தொகை |
| பாடப்புத்தகங்கள் | பாடப்புத்தகங்கள் இலவசம் | | பொருந்தாது |
| பள்ளிச் சீருடை | பள்ளிச் சீருடை இலவசம் | | பொருந்தாது |
| போக்குவரத்து உதவித்தொகை* | பள்ளிப் பேருந்தில் செல்லும் மாணவர்களுக்கு மாதந்தோறும் பள்ளிப் பேருந்துக் கட்டணத்தில் 70% உதவித்தொகை; அல்லது<br><br>பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் $21 என ஓராண்டுக்கு $252 வரை போக்குவரத்து உதவித்தொகை வழங்கப்படும் | பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் $21 என ஓராண்டுக்கு $252 வரை போக்குவரத்து உதவித்தொகை வழங்கப்படும் | பொருந்தாது |
| பள்ளி உணவு உதவித்தொகை^ | ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் ஒவ்வொரு பள்ளி நாளுக்கும் வாரந்தோறும் 7 இலவச உணவுக்குரிய உதவித்தொகை வழங்கப்படும்; | ஒப்புதல் வழங்கப்பட்ட மாதம் முதல் ஒவ்வொரு பள்ளி நாளுக்கும் வாரந்தோறும் 10 இலவச உணவுக்குரிய உதவித்தொகை வழங்கப்படும்; | பொருந்தாது |
| கல்வி உதவித்தொகை | பொருந்தாது | | ஓராண்டுக்கு $1,600 |

*FAS விண்ணப்ப ஒப்புதல் ஜனவரியிலிருந்து இல்லையென்றால், உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட மாதத்திலிருந்து அதே ஆண்டு டிசம்பர் வரைக்குமான சார்பு-மதிப்பீட்டின்படி போக்குவரத்து மானியம் வழங்கப்படும்.
^பள்ளியில் வாங்கப்பட்டு உட்கொள்ளப்படும் பள்ளி உணவுகளுக்கான மானியங்கள்.

## எவ்வாறு விண்ணப்பிப்பது?

QR குறியீட்டை ஸ்கேன் செய்து, MOE-இன் Student Finance System-இல் உள்நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை இணையத்தில் சமர்ப்பிக்கலாம். மாணவர் நிதி உதவி பற்றிய சமீபத்திய தகவல்களையும் தற்போதைய பரிவர்த்தனை பதிவுகளையும் Student Finance System -இல் பார்க்கலாம்.

உங்கள் விண்ணப்பத்தின் முடிவை பள்ளி உங்களுக்குத் தெரிவிக்கும். விண்ணப்பத்தின் நிலையைப் பார்க்க, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் Student Finance System -இல் உள்நுழையலாம்.

**studentfinance.moe.gov.sg**

## கூடுதல் உதவி தேவையா?

உங்களுக்குக் கூடுதல் உதவி தேவைப்பட்டடால், நீங்கள் உங்கள் பிள்ளையின் பள்ளியை அணுகிக் கூடுதல் உதவியை நாடலாம்.

உங்களுக்கு மின்னிலக்கக் கருவி பெறுவதற்கும் அதோடு/அல்லது அகண்ட அலைவரிசை இணையத் தொடர்பைப் பெறுவதற்கும் உதவி தேவைப்பட்டால் நீங்கள் தகவல்தொடர்பு, ஊடக மேம்பபாட்டு ஆணையத்தின் (IMDA) மின்னிலக்க அணுகல் திட்டங்களுக்கு# விண்ணப்பிக்கலாம். கூடுதல் தகவல்களுக்கு www.digitalaccess.gov.sg இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்.

இது குறித்துத் தகவல் பெற, **6377 3800** என்னும் தொலைபேசி எண்ணின்மூலம் அல்லது ***info@imda.gov.sg*** என்னும் மின்னஞ்சல்மூலம் தொடர்பு கொள்ளலாம்.

# தகுதிக்கும் இருப்புக்கும் உட்பட்டது.

## ஏனைய தகவல்கள்

**வெவ்வேறு பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள்**

*நீங்கள் பள்ளிக்குச் செல்லும் உங்களது எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்கள் பயிலும் ஏதேனும் ஒரு பள்ளியில் ஒரு விண்ணப்பப் படிவத்தைச் சமர்பித்தால் போதுமானது. விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் பள்ளி, உங்கள் பிள்ளைகள், அனைவரது விண்ணப்ப முடிவுகளையும் உங்களுக்குத் தெரியப்படுத்தும்.*

**2027-இல் உயர்நிலை 1-ஆம் வகுப்புக்குச் செல்லும் தொடக்கநிலை 6-ஆம் வகுப்பு மாணவர்கள்**

*தொடக்கநிலை 6-ஆம் வகுப்பு மாணவர்கள், தத்தம் தொடக்கப்பள்ளிகளில் அடுத்த ஆண்டுக்குரிய உயர்நிலை ஒன்றாம் வகுப்புக்கான கல்வி அமைச்சின் நிதி உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.*

கூடுதல் தகவல்கள் பெற, ***www.moe.gov.sg/financial-matters/financial-assistance/*** என்னும் இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்.